2004 பிப்ரவரி 12]

46—

மலரின வளர்ப்புப் பூங்கா

***23783—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலரின வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சியை விரிவுபடுத்த டிட்கோ உதவியுடன் மலரின வளர்ப்பு அடிப்படை கட்டமைப்புப் பூங்கா ஒன்றை கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் அமைத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் டிட்கோ உதவியுடன் மலரின வளர்ப்பு அடிப்படை கட்டடமைப்புப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியானது மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியுள்ள பகுதியாகும். இங்குள்ள விவசாயிகள் பெரும்பாலும் தென்னை, கரும்பு விவசாயம் செய்து வருகின்றார்கள். கடந்த மூன்றாண்டுகளாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக பெரிதும் பாதித்து உள்ளார்கள். இங்குள்ள சீதோஷ்ண நிலைக்கேற்ப ஊட்டி, தருமபுரி மாவட்டங்கள் போல, மலரின வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சியை விரிவுபடுத்த டிட்கோ உதவியுடன் மலரின வளர்ப்பு அடிப்படை கட்டமைப்புப் பூங்கா ஒன்று அமைத்து, கொய்த்த மலர்கள் ஏற்றுமதியை நடப்பாண்டில் தொடங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் ஓசூரில் 'டான்ஃபுளாரா' உட்கட்டமைப்புப் பூங்கா நிறுவனம் என்ற பெயரில் சுமார் 50 ஹெக்டேர்

பரப்பில் மலர்ப் பூங்கா ஒன்றினை ரூ.24.85 கோடி திட்டச்செலவில் டிட்கோ நிறுவனம் கூட்டு முயற்சியில் அமைத்து வருகிறது. இப்பூங்காவில் 50 மலர் வளர்ப்புப் பிரிவுகளுக்குத் தேவையான முழுமையான உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படவுள்ளது. மத்திய செய் முறை இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இதில் உள்ள இடம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் மலரின வளர்ப்பு குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இப்பூங்கா 2003-2004 ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் வெற்றியுடன் செயலாக்கப்பட்ட பின்னர், இதுபோன்ற பூங்காக்களை மற்ற இடங்களில் அமைக்க, சந்தை நிலவரம் மற்றும் அவ்விடங்களில் உள்ள தட்பவெட்ப நிலைகளை அறிந்து, தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்கள் மூலமாக ஆவன செய்யலாம் என டிட்கோ நிறுவனம் கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. அ. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

47—

கால்நடை மருத்துவமனை

•10405—திரு. அ. நடராஜன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சி, ஆய்ந்தாக்கம் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் பகுதியிலே கடந்த வருடம் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கிய நேரத்தில் போர்க்கால நடவடிக்கையாக போதிய மருந்துகளுடன் மருத்துவக் குழுவை அனுப்பி 5000-க்கும் மேற்பட்ட கால்நடைகளை காப்பாற்றிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.